UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1978-2-7.
PERIODICALS
DIVISION

பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 22 ஸபர் 25 இதழ் 356
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-2-78

சன்சயின் சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
இது ஓர் லாலா தயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## வேலைநிறுத்தம் முடிவடைந்தது!

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சே, சிவஞானத்திற்கும், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகளான திரு. இக்பால், திரு. தியாகராசா ஆகியோருக்குமிடையில் நேற்று நண்பகல் ஏற்பட்ட சமரச முடிவைத் தொடர்ந்து, கடந்த 3 நாட்களாக நடைபெற்ற மாநகரசபைத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது.

யாழ். பெரியாஸ்பத்திரி 14ம் வார்ட்டில் ஆணையாளர் சிகிச்சைபெற்று வருவதால், அங்கு நேற்று நண்பகல் 12 மணியளவில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது. (க-உ)

# மக்கள் ஜனாதிபதியாக ஜே. ஆர்.

# இன்று பதவியேற்கிறார்



## நாட்டு மக்களுக்கு நாளை செய்தி

இலங்கை அரசியல் வானில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக ஜொலித்து, நாடாளுமன்றத்தில் அங்கத்தவராகவும், அமைச்சராகவும், பிரதமராகவும் திகழ்ந்து; ஒழுக்க நெறியிலும் சத்தியத்தின் வழியிலும் ஒரு சரித்திரப் புருஷராக விளங்கி, ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாத்து, ஈழத்து மக்களிடையே ஒரு உன்னத இடத்தைப் பெற்றுக் கொண்ட திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று காலை 8-58க்கு மக்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்கின்றார்.

இலங்கைக் குடியரசின் மக்கள் தேர்ந்தெடுத்த முதல் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்யும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நாளை மலையகத் தலைநகர் கண்டி மாநகரின் எண்கோண மண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்கு செய்தி விடுப்பார்.

### நிகழ்ச்சிகள்

காலை 8-26க்கு ஆயுதப் படையினரின் மரியாதையை ஜனாதிபதி ஏற்பார்.

காலை 8-27க்கு அழைக்கப்பட்டோர் எழுந்து நிற்கும் நிலையில், ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவைக்கு மரியாதை வழங்கும் முகமாக 21 மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்படும். 8-32க்கு முப்படைகளின் அணிவகுப்பை ஜனாதிபதி பார்வையிடுவார். 8-40க்கு ஜனாதிபதிக்கு இறுதி

[8-ம் பக்கம் பார்க்க]

### உள்ளே

ஜனாதிபதியாக ஜே. ஆர். ஜெயவர்த்தன பதவி யேற்பதை யொட்டிய அநுபந்த மலர் உள்ளே.

Leyland

கொலெட்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனம் மூலமாக
அஷோக் லேலண்ட்
7·5 தொன் லொறி சஸி மார்ச் கடைசி வாரம் கிடைக்கும்.
ஆஸ்டின் லொறி சஸி
1½ தொன், 2 தொன், 3 தொன், 5 தொன்
வேறு பார அளவுகளிலும் இன்னும் 4 மாதத்தில் கிடைக்கும்.
ரூபா 20,000 முற்பணமாகக் கட்டி ரிசேர்வ் பண்ணலாம்.
விபரங்களுக்கு:
சமுத்திரா ட்றேட்ஸ் லிமிட்டெட்,
23/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7236 8414

## "துணிவும் மதிநுட்பமும் நிறைந்த பெருந்தலைவர்"

### பேரவையில் 'அமிர்' புகழ்மாலை

[கொழும்பு]

"துணிவும், மதிநுட்பமும் பெருந்தன்மையும் கொண்ட திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஒருகட்சி அரசு ஆட்சியிலிருந்து நாட்டைக் காப்பாற்றி, பாராளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றி

(8-ம் பக்கம் பார்க்க)

தார்மீக சமுதாயத்தின் சிற்பி, திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியாகப் பதவியேற்பதை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.
மக்கள் மனதில் லாலா— அவை தருவன, சிக்கன சலவைக்கு 'சன்சயின் சோப்'
லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி.

இன்று மலரும் புது யுகத்தின்
முதல் மக்கள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு
ராஜகோபால்ஸ்
வாழ்த்து மலர்களைச் சமர்ப்பிக்கின்றோம்.
யாழ்ப்பாணம், — கொழும்பு.
★★★★★★★

# அறிவித்தல்

எங்கள் விற்பனைப் பிரதிநிதியாக இருந்த

**திரு. விசுவநாதன் பாலசுப்பிரமணியம்**

என்பவர் 12-1-78 முதல் எங்கள் தொழிலகத்தில் வேலைசெய்வதில்லையென்றும் அவருக்கும் எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றும் விற்பனையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

க. கனகராசா
தொழிலதிபர்
மில்க்வைற் தொழிலகம்.

8405



# தேவை

ஆண், பெண் குழந்தைகட்கான றெடிமேட் ஆடைகள் வெட்டித்தைப்பதற்கு அனுபவம் வாய்ந்த இருபாலாரும் தேவை. வேலைக்கேற்ப வேதனம் வழங்கப்படும். தகைமைச் சான்றிதழ்களுடனும், அனுபவச் சான்றிதழ்களுடனும் திங்கட்கிழமை (6-1-1978) அன்று காலை 10-12 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

**கிறீன் பீ(F)ல்ட்**

**ரவல் ஒப்பறேற்றர்ஸ்**

26, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்

8415



# இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் பயிற்சி நிலையம்

வகுப்புகள்:- G.A.Q., G.S.Q., First in Commerce B. A., B.com.

நடைபெறும் இடங்கள்:- யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டுநகர்.

தகைமைகள்: (I) G. C. E A/L நான்கு பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.
(II) 25 வயதிற்கு மேற்பட்டோர் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**புதிய வகுப்புகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 4-2-78.**

**விண்ணப்ப முடிவு திகதி: 10-2-78 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

புதிதாக பதிய விரும்பும் மாணவர்கள் பாடங்கள் பற்றிய விபரத்தையும் பதிவு அனுமதிப் பத்திரத்தையும் முத்திரையிட்ட சுயமுகவரி கொண்ட 9'' X 4'' தபால் உறை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பர இல 1000,
C/o, ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.


# சந்தை நிலவரம்

பொருட்கள் -- யாழ்ப்பாணம்

| விபரம் | | வெளிச் சந்தை ரூ.-ச. | விற்பனை இலாகா ரூ.-ச. |
|---|---|---|---|
| அரிசி | 4 கண்டு ... | 3-75 | |
| உழுந்து [முழு] | ருத்தல் ... | 2-00 | |
| பயறு | ருத்தல் ... | 2-60 | |
| செத்தல் மிளகாய் | ருத்தல் ... | 10-50 | |
| பச்சை மிளகாய் | ருத்தல் ... | 2-75 | 1-10 |
| சின்ன வெங்காயம் | ருத்தல் ... | 2-60 | 2-80 |
| புளி | ருத்தல் ... | 1-30 | |
| உப்பு | ருத்தல் ... | -15 | |
| சோயா | ருத்தல் ... | 2-25 | |
| கோப்பிக்கொட்டை | ருத்தல்... | 12-00 | |
| சர்க்கரை | ருத்தல் ... | 2-70 | |
| உருளைக்கிழங்கு | ருத்தல் ... | 2-60 | 2-60 |
| மரவள்ளிக்கிழங்கு | ருத்தல் ... | -80 | -50 |
| கத்தரிக்காய் | ருத்தல் ... | 1-60 | 1-00 |
| வெண்டிக்காய் | ருத்தல் ... | 1-50 | |
| பயிற்றங்காய் | ருத்தல் ... | 1-80 | |
| பூசனிக்காய் | ருத்தல் ... | -30 | -45 |
| பாகற்காய் | ருத்தல் ... | 1-60 | -90 |
| புடலங்காய் | ருத்தல் ... | 1-50 | -90 |
| தக்காளி (காய்) | ருத்தல் ... | -90 | |
| ,, (பழம்) | ருத்தல் ... | 1-20 | -70 |
| வாழைக்காய் | ருத்தல் ... | 1-50 | |
| தேங்காய் | ஒன்று ... | 1-20 | |
| கருணைக்கிழங்கு | ருத்தல் ... | -60 | -50 |
| கீரை | பிடி ... | -25 | |
| வெங்காயப்பூ | பிடி ... | -60 | -60 |
| வல்லாரை | பிடி ... | -30 | |
| தேங்காயெண்ணை | போத்தல்... | 3-75 | |
| நல்லெண்ணை | போத்தல் ... | 15-50 | |
| கரட் | ருத்தல் ... | 3-00 | 1-80 |
| பீட்றூட் | ருத்தல் ... | 2-00 | |
| கோவா | ருத்தல் ... | 1-20 | -80 |
| லீக்ஸ் | ருத்தல் ... | 3-00 | 1-60 |
| தேசிக்காய் | ருத்தல் ... | 1-80 | |
| இராசவள்ளிக்கிழங்கு | ருத். ... | 1-80 | 1-40 |

## வசாவிளான் இளைஞன் ஈரானில் மரணம்

தெஹ்றான், பெப். 3

வசாவிளானைச் சேர்ந்த செல்வரத்தினம் என்னும் இளைஞன், ஈரானில் தொழில் நிறுவனமொன்றில் கடமையாற்றிக்கொண்டிருக்கையில் சுகவீனம் காரணமாக தெஹ்றான் மருத்துவநிலையமொன்றில் அனுமதிக்கப்பட்டு காலமானார்.

அவரின் சடலத்தை இலங்கைக்கு அனுப்புவதற்கு இங்குள்ள இலங்கை-இந்திய நண்பர்கள் மற்றும் தொழில் நிறுவன நண்பர்களும் ஒழுங்குகள் செய்துள்ளனர்.


# மக்கள் ஜனாதிபதி

மாண்பு மிகு

**ஜே. ஆர். ஜெயவர்த்தன**

அவர்களுக்கு

**நல்லாசியும் வாழ்த்துக்களும்**

**அகில இலங்கை வணிகர் சங்க**

யாழ். கிளை, யாழ்ப்பாணம்.

**நவீனசந்தை வர்த்தக உரிமையாளர் சங்கம்**

21, மக்கள் நவீன சந்தை

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர்: த. சங்கரப்பிள்ளை (8417) செயலாளர்: க முத்துலிங்கம்



# விசேட அழைப்பு

## யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

# பொன்விழா

## செப்ரம்பர் மாதம் 1978

மேற்படி கல்லூரி அதிபர், பெற்றோர், பழைய மாணவர், ஆசிரியர், அபிமானிகள், கல்லூரி மாணவர்கள் ஆகிய அனைவரும் கல்லூரியின் ஐம்பதாண்டுப் பூர்த்தியை உன்னி எதிர்வரும் 1978-ம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் பொன்விழாவை நடாத்தவிழைகின்றனர். இதனிமித்தம், பெற்றோர், பழைய மாணவர், அபிமானிகள் ஆகிய அனைவரினதும் ஏகோபித்த பூரண ஒத்துழைப்பை நாடி பொன்விழா பொதுநிர்வாகக் குழுவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர். எனவே உங்கள் முகவரிகளை பொதுச்செயலாளர், பொன்விழா பொதுநிர்வாகக்குழு, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் என்னும் முகவரிக்கு 28-2-78க்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வீ. கதிரவேலு
பொதுச்செயலாளர்,
பொன்விழா பொதுநிர்வாகக் குழு

J. S. அரியரத்தினம்
தலைவரும், அதிபரும்

8412



## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அதிகார விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் இல. ஈடு/15046

இராமுப்பிள்ளை துரையப்பா மகள் மகேஸ்வரி
மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
—வழக்காளி

எதிராக

1. விஜசித்தம்பி சிவலோகநாதன் பெண்
2. புஷ்பராணி, சேவையர் உசன், மிருசுவில்

—எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்கு கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978-ம் ஆண்டு மாசிமாதம் 27-ம் திகதி (27-2-78) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் குறித்த ஆதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த எதிரிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 2900/-வும் மேலும் ரூபா 2000/- வருடமொன்று நூற்றுக்கு 12 வட்டிவீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம்ஆண்டு புரட்டாதி மாதம் 23-ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5-ம் திகதிவரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 483-65 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 284-45 நடைபெறவேண்டிய செலவு ரூபா 109-10, மேலதிக சம்யாசமயச் செலவு ரூபா 90-10) கொடுக்கவேண்டி இருப்பதாலும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி கச்சாய் கோவிற்பற்று கச்சாய் இறை அனுமான்புலம் நிலப்பரப்பு 8 இந்த நிலப்பரப்பு எட்டுக்கும், எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை கைம்பெண் தங்கமுத்துவின் ஆதனம். வடக்கு விசுவநாதர் பெண் தெய்வானைப்பிள்ளையின் ஆதனம். மேற்கு தம்பிஐயா அருணாசலத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும் ஒழுங்கையும். தெற்கு குமரர் பெண் கதிராசிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்: இவ்வெல்லைப்படியும் இதடங்கலும்.

கா. மூத்துக்குமாருஐயர்
நீதிமன்ற ஆணையாளரும்
கெமிஷன் விலைமதிப்பாளரும்

"தங்கவேல் ஆலயம்"
சந்நிதி வேல்
பருத்தித்துறை.
23-12-77

8410


# வரிவிளம்பரம்


## விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்கு வடக்குப்புறமாக உள்ள 30 பரப்புப் பனங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ. கனகரத்தினம், தென்மராட்சி ப. நோ. கூ. ச. கொடிகாமம். 8386

நீமியா உரம்: மிளகாயிலும் வெங்காயத்திலும் அதிக விளைச்சலைப் பெற நீமியா உரத்தைப் பாவியுங்கள்.— ஓர் மில்க்வைற் தயாரிப்பு. 8362

## தேவை

பத்து வருடங்களுக்கு மேலான அனுபவமும் நற்பழக்கமும் நம்பிக்கையும் வாய்ந்த லொறி லைசென்ஸ் உள்ள வான் டிறைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8411, C/o ஈழநாடு, லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8411

## கல்வி

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று இலக்கணம் இலக்கியம் (Literature) புத்தக சேவை (Library Service) ஆங்கிலப்பேச்சு (Spoken English) பொதுஅறிவு கற்றுக் கொடுப்பார்கள். மத்திய ஸ்தலத்திற்கு வருபவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்படும். விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8258 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8258

## பயிற்சி

3 மாத விசேட A. M. I. M. I [London] பரீட்சைக்கான மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-02-1978ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு: அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒப் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 8374


## ஜனாதிபதி பதவியேற்பு வைபவம் சாவகச்சேரியில்

[யாழ்ப்பாணம்]

நாட்டின் ஜனாதிபதியாக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பதவி யேற்கும் வைபவம் இன்று மாலை சாவகச்சேரித்தொகுதி ஐக்கியதேசியக் கட்சி ஆதரவாளர்களால் கொண்டாடப்படவிருக்கிறது.

மீசாலையிலுள்ள ஐ. தே. க. கட்சிமத்திய கமிட்டி காரியாலயத்தில் சாவகச்சேரி அமைப்பாளர் திரு. தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் ஐ. தே. க. கிளைத்தலைவர்கள் உரையாற்றுவார்கள்.

சாவகச்சேரியிலுள்ள ஆலயங்களில் விசேடவழிபாட்டிற்கும் ஐ தே. கட்சியினர் ஏற்பாடு செய்துள்ளனர். [க]

## சரவணையில்...

[நெல்லியடி]

ஜனாதிபதியாக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று பதவி ஏற்கும் வைபவத்தினை சிறப்பாகக் கொண்டாட ஊர்காவற்றுறை ஐக்கிய தேசியக்கட்சியினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் சரவணைக்கிளையினர் 4 ம் திகதி சரவணை செல்லப்பா கடையருகில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துகின்றார்கள். சைக்கிள் ஓட்டப் போட்டிகள் விநோதஉடைப் போட்டி, முட்டிஉடைக்கும் போட்டி, தலையணைச்சண்டைகள் பணிஸ்சாப்பிடும் போட்டிகளை நடாத்தவுள்ளார்கள் என்று சரவணைக்கிளைச்செயலாளர் திரு. வி. செல்வராசா தெரிவித்தார்.

ஈழநாடு
The Eelanaadu

## வாழ்த்துவோம்!

இன்று நம் நாட்டின் அரசியல் வரலாற்றில் மேலும் ஓர் அத்தியாயம் ஆரம்பமாகின்றது.

இதுவரைகாலமும் அரசாங்கத்தின் ஒரு கௌரவச் சின்னம்போல் விளங்கிவந்த ஜனதிபதி ஒருவர் பிரியா விடை பெற்றுக் கொள்கிறார். அதேசமயம் நிர்வாக அதிகாரங்களுடன் கூடிய மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனதிபதியாக இன்னொருவர் பதவி ஏற்கின்றார்.

1796ம் ஆண்டு பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்ட இலங்கை 1802ம் ஆண்டுபிரிட்டிஷ் குடியேற்ற நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1931ம் ஆண்டு வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டு 1946ல் பிரிட்டிஷ் பாராளுமன்ற மாதிரியில் அரசமைப்புச்சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. 1948ல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது.

1972ம் ஆண்டு மே 22ம் திகதி இலங்கை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதுவரையில் இருந்துவந்த ஆளுநர் பதவி ஒழிக்கப்பட்டு ஜனதிபதி பதவி உருவாக்கப்பட்டது.

குடியரசு ஆவதற்கு முன்பிருந்த கவர்னர்ஜெனரல் போலவே ஜனதிபதியும் அரசாங்கத்தின் கௌரவச்சின்னமாக விளங்கிவந்தாரே அன்றி அவரது அதிகாரங்கள் யாவும் பிரதமமந்திரியின் அதிகாரத் திற்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. அதனல் அப்பதவியின்மூலம் நாட்டுக்கு ஏதும் பயன் ஏற்பட்டதா என்பது ஆராயப்பட வேண்டிய விஷயம்.

இந்த நிலைமையில் கடந்த ஆண்டு மக்களின் அபரிமிதமான ஆதரவுடன் பதவிக்கு வந்த ஐக்கியதேசியக்கட்சி அரசு குடியரசுஅரசமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தி செயல்அதிகாரம் உள்ள ஜனதிபதி ஒருவரைப் பதவியில் அமர்த்துவதற்கு வழிவகுத்தது.

இதன்படியே இன்று பழைய ஜனதிபதி திரு. வில்லியம் கோபல்லவா பிரியாவிடைபெறுவதும், புதிய ஜனதிபதியாக திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வதும் நிகழ்கின்றன.

முதலில் கவர்னர்ஜெனரலாகவும் பின்னர் ஜனதிபதியாகவும் பல ஆண்டுகள் மக்கள் மெச்சும்வண்ணம் பணியாற்றி ஓய்வுபெறும் திரு. வில்லியம் கோபல்லவா அவர்களை இச்சந்தர்ப்பத்தில் நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

புதிய ஜனதிபதியாகப் பதவிஏற்கும் திரு. ஜே.ஆர். ஜயவர்த்தனவை மனப்பூர்வமாக வாழ்த்துவோம். இதுவரைகாலமும் நாமும் மக்களும் குறிப்பாக சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கி வந்த இன்னல்களும் பிரச்னைகளும் இனிமேலாகுதல் தீர்த்துவைக்கப்படும் என்று எதிர்ப்பார்ப்போம்.

நாட்டில் அமைதியும் ஒழுங்கும், சமூகசௌஜன்யமும் சுபீட்சமும் உருவாக வேண்டும். இந்தப்பணியை நிறைவேற்ற இறைவனின் ஆசியும் அருளும் திரு. ஜயவர்த்தனவுக்குப் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

சட்டப்படி வேலை

# சில தினங்கள்வரை ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இடம் பெற்றுவந்த சட்டப்படி வேலை இயக்கம் புதிய ஜனதிபதி பதவியேற்பு வைபவத்தையொட்டி சில தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையைச் சேர்ந்த ஐ. தே. க. சார்பு தொழிற்சங்கம் தவிர்ந்த ஏனைய தொழிற் சங்கங்கள் தொழிற்சாலையில் இடம் பெற்ற முறையற்ற நியமனங்களை ஆட்சேபித்தும், கூட்டுத்தாபனத் தலைவர் அளித்த உறுதி மொழிகள் நிறைவேற்றப்படாமையை ஆட்சேபித்தும் கடந்த மாதம் 18 ம் திகதி முதல் சட்டப்படி வேலை இயக்கத்தில் ஈடுபட்டுவந்தன

இச்சட்டப்படி வேலை இயக்கத்தினல் சீமெந்து உற்பத்தியும், விநியோகமும் பாதிக்கப்பட்டதால் சீமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருவதுடன் வெளிமார்க்கட்டிலும் சீமெந்தின் விலை வெகுவாக அதிகரித்துவிட்டது.

இது குறித்து தொழிற் சங்கங்கள் சீமெந்துக் கூட்டுத் தாபனத் தலைவருக்கு அறிவித்த போது அவர் இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது என்று கூறியதைத் தொடர்ந்து சட்டப்படி வேலை இயக்கம் தொடர்ந்து நடைபெற்றுவந்தது.

இன்று புதிய ஜனதிபதி பதவியேற்க இருப்பதால்; அவரைக் கௌரவிக்கும் முகமாகச் சில தினங்களுக்கு இச்சட்டப்படிவேலை இயக்கத்தை ஒத்திவைத்து, மீண்டும் தொடருவது என்று மேற்படி தொழிற் சங்கங்கள் தீர்மானித்து தற்போது அதைக் கைவிட்டுள்ளன.

## தையிட்டி கிராம மலர்ச்சிக்கு உதவ ஆணையாளர் உறுதி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பட்டின சபை எல்லைக்குள் உள்ள பின்தங்கிய கிராமமான தையிட்டிக் கிராமத்தின் முன்னேற்றத்திற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக காங்கேசன்துறை பட்டினசபை விசேட ஆணையாளர் திரு. க. சண்முகநாதன் உறுதியளித்துள்ளார்.

தையிட்டி கலாவல்லி சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் கலந்துகொண்ட ஆணையாளரிடம் நிலையத்தின் சார்பில் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்ட சமயமேஅவர் இவ்வாறு உறுதியளித்தார்.

நிலைய மைதானத்தில் திரு. வ. க. சம்பந்தர் தலைமையில் நடந்த இந்த ஆண்டுவிழாவில் கலந்து உரையாற்றிய விசேட ஆணையாளர்; தையிட்டிக் கிராமத்திற்கு உபதபால் நிலையம் ஒன்றை நிறுவவும், இக் கிராம மக்கள் பயன்பெறத் தக்கவகையில் மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலையை விஸ்தரிப்புச்செய்து முழுமையான வைத்தியசாலையாக இயங்கச்செய்யவும், இக் கிராமத்திற்கு மின் விஸ்தரிப்புச் செய்யவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்தார்.

# விமானச் சேவை திடீர் ரத்து!

[யாழ்ப்பாணம்]

இலங்கை விமானச்சேவை நேற்றைய தினம் திடீரென சகல யாழ்ப்பாண விமானச் சேவைகளையும் ரத்துச்செய்தது.

இதன் எதிரொலியாகபிரயாணிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளானர்கள்.

திருச்சியிலிருந்து வரவேண்டிய விமானமும் நேற்று சேவையில்ஈடுபடவில்லை (கெ)

அகில இலங்கை

## சட்டத்தரணிகள் சங்க மாநாடு மார்ச்சில்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்க பொதுக் கூட்டமும், வருடாந்த மகாநாடும் மார்ச் மாதம் 25ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

யாழ்ப்பாணம் பாம்கோட்டில், சங்க உப தலைவர் திரு. ஏ. அன்ரனி தலைமையில் நடந்த வடபகுதி சட்டத்தரணிகள் கூட்டத்தில், இம்மகாநாட்டிற்கான ஏற்பாடுகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ்ப்பாண எம். பி திரு. வி. யோகேஸ்வரன் மகாநாட்டிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்தார். (க)

## வாக்கெடுப்பின்றி நிறைவேறிய சட்டமூலம்

[கொழும்பு]

விசேட ஜனதிபதிகள் ஆணைக்குழு சட்டமூலம் தேசிய அரசுப் பேரவையில் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த பல யோசனைகளும் இதில் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

## 143வது பிறந்த தினம் கொண்டாடினர்

மாஸ்கோ பெப், 3

சோவியத் நாட்டில் வயதில் மிக முதியவரான மோச் அகாயு என்பவர் நேற்று தமது 143வது பிறந்த தினத்தைக் கொண்டாடினர்.

தமது ஊரில் பிறந்த தினத்தை இவர் கொண்டாடியபோது அதே ஊரைச் சேர்ந்த 100 வயதுள்ள ஒன்பது பேரும் அதில் கலந்து கொண்டனர் (உ)



ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் திரு எஸ். கே மகேந்திரன் சட்டத்தரணியானமையையொட்டி புங்குடுதீவில் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவுக்குத் தலைமை வகித்த எதிர்க்கட்சித்தலைவர் திரு அமிர்தலிங்கம், திரு. மகேந்திரனுக்கு மாலை அணிவித்து ஆசீர்வதிப்பதையும் திரு. எஸ். கே. மகேந்திரன் பதிலுரை நிகழ்த்துவதையும் இங்கு காணலாம்

கர்நாடகத்தில்

## அ.இ.அ.தி.மு.க.வுக்கு ஒரே ஒரு தொகுதி

சென்னை, பெப். 3

கர்நாடக மாநிலத்தில் ஜனதா கட்சிக்கும் அ.இ.அ.தி.மு.கவுக்கும்தேர்தல்உடன்பாடு ஏற்பட்டாலும், அ.இ.தி.மு.க.வுக்கு ஒரு இடம் மட்டுமே வழங்க ஜனதாகட்சியினர் முடிவு செய்துள்ளனர். பெங்களூர் தொகுதியே இவர்களுக்கு வழங்கப்படும்.

இதேவேளையில் தி.மு. கழகம் எந்தக்கட்சியுடனும் கூட்டுச்சேராமல் தனித்து போட்டியிடும்.

ஜனதா அரசு, 178 ஸ்தானங்களில் போட்டியிடும், கர்நாடக மாநிலக்கட்சியுடனை தேர்தல் உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. [கெ-இ]

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸின் கமிட்டிக்கூட்டம் நாளை மாலை சோண்டாவிலிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. (க)



உண்மையாகச் சேவை புரிபவனே நல்ல கிருகஸ்தன் அவன் பதில் நன்மை கருதாது கொடுத்துக் கொண்டே வாழ்வான்.

—மகாத்மாகாந்தி

மாணவர்களின்

# வேலை நிறுத்தமும் பகிஷ்கரிப்பும்!

(பிங்கிரிய)

ஆசிரியர் பற்றுக்குறையை நீக்குமாறு கூறி பிங்கிரியா மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 800 மாணவர்களும் ஆசிரியர்களும் வேலைநிறுத்தம் செய்தனர்.

ஆசிரியர்கள் இடமாற்றத்தை ஆட்சேபித்து மாதம்பை வித்தியாலயத்தில் 900 மாணவர்கள் வகுப்புகளை பகிஸ்கரிப்பு செய்தனர்.

மெதகம மகாவித்தியாலயத்தில் 39 உயர்வகுப்பு மாணவர்கள் ஆசிரியர் இடமாற்றத்தை ஆட்சேபித்து வெளிநடப்புச் செய்தார்கள்

இந்த வேலைநிறுத்தங்களும் பகிஷ்கரிப்பும், ஆசிரியர்களாலேயே ஒழுங்குசெய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## ஆசிரியர்கள் லீவுப் போராட்டம்

சென்னை, பெப். 3

தமிழ்நாட்டில் நேற்று ஆசிரியர்கள் 'லீவுப் போராட்டம்' ஒன்றை நடத்தினர்.

சம்பள உயர்வு உட்பட வேறுபலகோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் நேற்று இப்போராட்டத்தை நடத்தினர்.

ஆசிரியர்களில் பெரும்பான்மையினர் நேற்று திட்டமிட்டபடி சந்தர்ப்ப விடுமுறையில் நின்றனர்.

இதனல் பல பாடசாலைகளில் வகுப்புக்கள்பாதிக்கப்பட்டன. அநேகபாடசாலைகள் நடைபெறவில்லை. (இ)

யாழ்-கொடிகாமம் பஸ்சேவை:

# 'முத்திரைச்சந்தி ஊடாக புதியபஸ்சேவைவேண்டும்'

## தென்.கிழக்கு பிரயாணிகள் சங்கத்தினர் அமைச்சரை நேரில் சந்திப்பர்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரித் தொகுதியிலிருந்து யாழ். கல்விக்கந்தோருக்குச் செல்லும் பெற்றோரும், ஆசிரியரும் பெரும் சிரமத்திற்குள்ளாவதால், கொடிகாமத்திலிருந்து காலையில் முத்திரைச் சந்தி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு ஒரு பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சர் திரு எம். எச். முகமட்டிடம் தென்மராட்சி கிழக்கு பிரயாணிகள் சங்கம் கோரியுள்ளது.

தென்மராட்சி கிழக்கு பிரயாணிகள் சங்க செயலாளர் திரு க. கணபதிப்பிள்ளை அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜரில் இம்மாதம் 12 ம் தேதி வடபகுதிக்கு விஜயம் செய்யும்போது பஸ் சேவை பற்றி நேரில் பேச சந்தர்ப்பம் அளிக்குமாறு கேட்டுள்ளார்.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''சாவகச்சேரியிலுள்ள பெற்றோரும், ஆசிரியரும் நல்லூரிலுள்ள கல்விக் கந்தோருக்குச் செல்வதற்கு யாழ்ப்பாணம்வந்து மற்றொரு பஸ்ஸில் செல்லவேண்டியிருக்கிறது. இதனால் கல்விக்கந்தோர் சென்று திரும்ப, ஒரு நாள் செலவாகிறது. ஆதலால் காலையில், கொடிகாமத்திலிருந்து முத்திரைச்சந்தி ஊடாக யாழ்ப்பாணத்திற்கும், மாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து முத்திரைச்சந்தி ஊடாக, கொடிகாமத்திற்கும் ஒரு சேவையை ஆரம்பிக்கவும்.

''யாழ்ப்பாணத்தில் இரவு முதல் படக்காட்சி முடிந்ததும் அரியாலை, மாம்பழச் சந்தி பிரயாணிகள் கொடிகாமம் பஸ்ஸில் செல்வதால் கொடிகாமம் பிரயாணிகள் செல்லமுடியாமல் இருக்கிறது. ஆதலால் இரவு 9-30 மணிக்கு அரியாலைவரை ஒரு சேவையை நடாத்தவேண்டும்.

கொடிகாமத்திலிருந்து பாடசாலை சேவை, 8 மணிக்குமுன் புறப்பட்டுவிடுவதால், சாவகச்சேரி செல்லும் மாணவர்கள், வழக்கமான பஸ்களில் பிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது. இதனால் பிரயாணிகள் பாதிக்கப்படுகின்றார்கள். ஆதலால் எழுதுமட்டுவாளுக்கும், சாவகச்சேரிக்குமிடையில் தனியாக ஒரு பாடசாலை சேவையைச் சாவகச்சேரிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் மற்றொரு பாடசாலை சேவையையும் நடத்தவேண்டும்.

''கொடிகாமத்திலிந்து யாழ்ப்பாணத்திற்கு அரசாங்க தனியார்துறை உத்தியோகத்தருக்கென கடுகதி சேவை ஒன்றை காலையிலும், மாலையிலும் நடத்தவேண்டும். இந்த பஸ் கொடிகாமம், மீசாலை, சாவகச்சேரி, நுணாவில், கைதடி, நாவற்குளி ஆகிய இடங்களில்மட்டும் நிறுத்த வேண்டும்.

''இரண்டு வாசல் உள்ள பஸ்களில், பிரயாணிகள் பின் பக்க வாசலால் இறங்குவதால், பஸ்ஸில் ஏற நிற்கும் பிரயாணிகள் கஷ்டப்படுகின்றனர். பிரயாணிகளை முன்பக்க வாசலால் இறங்கச்செய்யுமாறு கண்டக்டர்களைப் பணிக்க வேண்டும். கொடிகாமம் பஸ் நிலையம், பிரதான வீதிக்கருகில், மிக குறுகிய இடத்திலிருப்பதால், அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க பஸ் நிலையத்தை வசதியான வேறு ஒரு இடத்திற்கு மாற்றவேண்டும்.

பருத்தித்துறை டிப்போவிலிருந்துவரும் சகல பஸ்களும் கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு சென்று பிரயாணிகளை இறக்கிய பின்னரே, திரும்பவும் கொடிகாமம் பஸ் நிலையம் செல்ல ஏற்பாடு செய்யவேண்டும்.'' (க)

## பரந்தன் ப.நோ. கூ. சங்கம் 15,000 புசல் நெல் கொள்வனவு

(மாவிட்டபுரம்)

யாழ்ப்பாணப்பகுதியிலேயே முதன்முதலாக பொங்கல்தினத்திற்கு மறுதினம் இவ்வருடக் காலபோக நெல்கொள்வனவை ஆரம்பித்த பரந்தன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இது வரை 15 ஆயிரம் புசலுக்கு மேல் நெல் கொள்வனவுசெய்துள்ளது.

சங்கஅங்கத்தவர்கள்நெல்லை விற்று 3 நாட்களுக்குள் பணம் பெறவும், தாம்பெற்ற கடன்களை பணமாகத் திருப்பிச் செலுத்தவும் கடனை நெல் மூலம் செலுத்தவும் மேற்படி சங்கத்தினர் ஒழுங்குகள் செய்துள்ளதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சங்கத்திற்கு நெல் வழங்குவதில் ஆர்வம்காட்டிவருகின்றனர்.

மேற்படி சங்கத்தின் நெறியாளர் குழுத் தலைவர் திரு. நா. சந்தையா, புதிய பொது முகாமையாளர் திரு. துரைசாமி ஆகியோர் இந்த நெல் கொள்வனவுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## இடமாற்றங்கள்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை மக்கள் வங்கிக்கு மன்னார் மக்கள் வங்கியில் இருந்து திரு.நடராஜா செல்வநாயகம் இடமாற்றலாகியுள்ளார்.

யாழ். கச்சேரியில் சமூக சேவை உத்தியோகஸ்தராகக் கடமையாற்றிய திரு.பி.எஸ். திருச்செல்வம் கொழும்பு கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். [உ]

ஜி ஜி·

## ஞாபகார்த்தக் குழு இன்று கூறுகிறது

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நினைவு தினத்தை யொட்டி இறுதி முடிவுசெய்வதற்காக வண்ணார்பண்ணை காங்கிரஸ் கிளைக் காரியாலயத்தில் இன்று மாலை ஜி. ஜி. ஞாபகார்த்த குழு கூடுகிறது.

திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் தலைமையிலான ஜி. ஜி. ஞாபகார்த்த குழுவினர், தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ், டாக்டர் ஏபிரகாம் தலைமையிலான குழுவினர் தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணியினர் கலந்து கொள்வார்கள்.

## "மக்கள் ஜனாதிபதி தலைமையில் காங்கேசன் துறைமுக அபிவிருத்தி"

### யாழ். துறைமுகத்தொழிலாளர் சங்கம் வாழ்த்து!

(யாழ்ப்பாணம்)

அமரர் டட்லி சேனநாயகா பிரதமராயிருந்த காலத்தில் அவரே குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்த காங்கேசன் துறைமுக அபிவிருத்தித்திட்ட வேலைகள் மக்கள் ஜனாதிபதியின் தலைமையில் விரைவில் நிறைவுபெறுவதற்கும் நாடு அபிவிருத்தியில் முன்னேறுவதற்கும் வாழ்த்துத் தெரிவித்து யாழ். மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கம் அறிக்கை அறிக்கை வெளியிட்டுள்ளது. திரு. ஜே. ஆர். நீண்டகாலம் பூரண சுகத்துடன்வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கவும் அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத் தூதுகோஷ்டி கடந்த 65ம் ஆண்டு அப்போதைய தொழிலமைச்சர் ஜனாப் எம். எச். முஹமதுவைச் சந்தித்துக் காங்கேசன் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யக் கோரியதற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்ததையும், தேசியமய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா வடபகுதிக்கு விஜயம் செய்திருந்தபோது இத்துறைமுக அபிவிருத்தியின் அவசியம் பற்றிப் பிரஸ்தாபித்ததையும், துறைமுக அபிவிருத்திக் கமிஷன் தனது சிபார்சில் கொழும்புத் துறைமுகத்தை மட்டும் வைத்துக்கொண்டு பெருவாரியான கப்பல்களைச் சமாளிக்க முடியாதென்றும் எனவே காங்கேசன், காலி, திருமலைத் துறைமுகங்களையும் அபிவிருத்திசெய்ய வேண்டுமென்றும் தெரிவித்திருந்ததையும் யாழ் ம து. தொ. பொ. சே. கூ. சங்கம் அதன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. [அ]

சுருட்டுத்தொழிலாளர்

## சம்பள உயர்வுக்கு அவகாசம் கொடுக்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

சுருட்டுத் தொழிலாளருக்கு நூறு சுருட்டுக்கு 50 சதம் கூட்டிக் கொடுக்கவேண்டும் என்ற சங்கத்தின் தீர்மானத்திற்கிணங்க இம்மாதம் 6-ம் திகதிமுதல் நூறு சுருட்டுக்கு 3 ரூபா 25 சதம் சம்பளம் வழங்கவேண்டுமென்று சுருட்டு முதலாளிமார்களை அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

சங்கத்தின் தீர்மானத்தை ஆதரித்து விளம்பரம்செய்துள்ள இடங்களில் தொழிலாளர் வேலைசெய்யலாம் என்றபோதிலும் விளம்பரம் செய்யாதிருக்கும் சுருட்டு முதலாளிமார்களிடம் வேலைசெய்யும் தொழிலாளரின் நலன் கருதி 10 ம் திகதிவரை வேலைக்குத் திரும்பவேண்டாமெனவும் சங்கம் உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராசசிங்கம் தலைமையில் நல்லூரில் நடைபெற்ற சுருட்டுத் தொழிலாளர் பிரதிநிதிகளின் மகாநாட்டில் கூலி உயர்வு,வேலைநிறுத்தம்பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (அ)

## நல்லூரில் கூட்டணிக் கிளைகள் புனரமைப்பு

[யாழ்ப்பாணம்]

நல்லூர்த் தொகுதியின் கிராமசபைப்பகுதிகள்தோறும் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகளை அமைக்க நல்லூர்த் தொகுதி கூட்டணிக்கிளை தீர்மானித்துள்ளது.

சகல தமிழ்ப் பகுதிகளிலும் தமிழர் விடுதலைகூட்டணிகிளைகளை அமைத்து புனரமைப்பு நடவடிக்கைகளை அமைக்க வேண்டுமென்று அண்மையில் பட்டிருப்பில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக் குழு தீர்மானித்ததைத் தொடர்ந்து நல்லூர்த் தொகுதியில் புனரமைப்புவேலைகள் இன்று ஆரம்பமாகின்றன.

இத்திட்டத்தின் முதலாவது கூட்டம் இன்று மாலை கோண்டாவில் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறுகிறது.

இம்மாத இறுதிக்குள் இத்தொகுதியில் உள்ள 10 கிராம சபைப் பகுதிகளிலும் 10 கிளைகள் அமைக்கப்பட்டுவிடும் என்று திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்தார். [இ]

சுன்னாகம் ப.நோ.கூ சங்க

## 17 ஊழியர்கள் திடீர் வேலைநீக்கம்

யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மேலதிக ஊழியர்கள் 17 பேர் இம் மாதம் 1-ம் தேதி தொடக்கம் திடீர் வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளனர்.

சென்ற ஜனவரிமாதம்கூடிய இயக்குநர்சபையின் தீர்மானத்தின்படி ப. நோ. கூ. ச. கிளை முகாமையாளர்கள் 6 பேர், விற்பனையாளர் 8 பேர். காரியாலய ஊழியர் 3 பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

இவர்கள் சேவை இளமை அடிப்படையின்படி கடைசியிலுள்ளவர்களாவர். இவர்களுக்கு ப. நோ. கூ. ச.வில் வெற்றிடங்கள் ஏற்படும் பொழுது முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது.

ப. நோ. கூ. சங்கத்தின் சுத்த லாபத்தில் 55 வீதமே சம்பளமாகக் கொடுக்கவேண்டுமென்று நிபந்தனை. இதற்கு மேலாகஊழியர் அதிகரிப்பும், சம்பளஅதிகரிப்புமே மேற்படி ஊழியர்களைவேலைநீக்கம் செய்யவேண்டிநேரிட்டதாகக்கூறப்படுகிறது.

மேலும் கூப்பன் புத்தகங்கள் ரத்துச்செய்யப்பட்டதால் சங்கத்திலிருந்து மேலும் ஆட்குறைப்பு செய்யநேரிடும் எனத் தெரிகிறது. (ஈ)

## பிரயாணிகள் தங்குமிடம்

[நெல்லியடி]

"இலங்கையிலுள்ள லயன் கழகங்கள் மக்களுக்குச்சேவை செய்வதில் முன்னின்று உழைத்துவருகின்றன. நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவிசெய்ய ஆவலாய் உள்ளவர்களை நம் லயன் கழகம் பயன்படுத்தி, சிறப்பான வசதியை மக்களுக்கும் நாட்டிற்கும் ஏற்படுத்திக்கொடுக்கின்றது.'

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் லயன் கழகத் தலைவர் டாக்டர் யோகு பசுபதி, மந்திகை ஆஸ்பத்திரி சந்தியில் பிரயாணிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட 'சதாசிவம் பிள்ளை ஞாபகார்த்த மண்டபத்தை' திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இம்மண்டபம் லயன் கழகத்தினருக்காக பருத்தித்துறை குமார் அச்சக உரிமையாளர் திரு. ச. காந்திதாசனால் வழங்கப்பட்டது. பேராசிரியர் கணேசலிங்கம் தலைமையில் திறப்பு விழா நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## மானிப்பாய் தொகுதியில் இன்று வழிபாடு

[யாழ்ப்பாணம்]

திரு. ஜே.ஆர். ஜயவர்த்தன இன்று ஜனாதிபதிப்பதவி ஏற்பதை முன்னிட்டு மானிப்பாய்த் தொகுதி ஐ.தே.கட்சி கிளைகள் உள்ள சகல இடங்களிலும் அமைந்துள்ள ஆலயங்களில் விசேஷ பூசைகள் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை மானிப்பாய் தொகுதி ஐ.தே. கட்சி பிரதம அமைப்பாளர் ஆர் எஸ். அலோசியஸ் செய்துள்ளார்.

சுன்னாகம், குப்பிளான், இணுவில், சண்டிலிப்பாய் மத்தி, உடுவில், சுதுமலை, சங்குவேலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள சைவ ஆலயங்களில் விசேஷ பூசைகள் நடைபெற இருக்கின்றன.

சுதுமலை ஐ.தே.க.கிளைத்தலைவர் சுதுமலையில் திரு.சா.சூரியகுமார் தலைமையில் மருதனமடத்தில் உள்ள சைவ ஆலயத்திலும் சுன்னாகம் ஐ.தே.கட்சிக்கிளைத் தலைவர் திரு. சபா சின்னத்தம்பி தலைமையிலும், சண்டிலிப்பாய் மத்தியில் சண்டிலிப்பாய் ஐ.தே.க கிளை செயலாளர் கே. எம்.தேவராசா தலைமையிலும் விசேட வழிபாடுகள் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ப[illegible] பாய்வெங்காயம்

## இவர்களுக்கும் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

தனிப்பட்ட வர்த்தகர்களுக்கும் பம்பாய் வெங்காயத்தை விநியோகம்செய்ய கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் முடிவுசெய்துள்ளது

ஒவ்வொரு வர்த்தகருக்கும் 200 அந்தருக்கு கூடாமல், பம்பாய் வெங்காயம் வழங்கப்படும்.

# ★ SOUVENIR FOR THE SAVIOUR OF THE NATION ★

## இலங்கையின் அதி மேன்மைதங்கிய ஜனாதிபதியாக மாண்புமிகு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பதவியேற்பதையிட்டு வெளியிடப்பட்ட அனுபந்தம்

## தார்மீக சமுதாயத்தின் தலைசிறந்த சிற்பி ஜே. ஆர்.

(ம. அமிர்தலிங்கம், விழாக்குழுச் செயலாளர்)

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் நாம் காலனித்துவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றோமே தவிர எம்மை நாமே ஆளக்கூடியவகையில் பொருளாதார சுதந்திரத்தையும், எமது நாட்டையும் கட்டியெழுப்புவதில் நாம் கொள்ளவேண்டிய அக்கறையிலிருந்து திசை திருப்பப்பட்டு வந்துள்ளோமென்பதை யாரும் மறுக்கமுடியாது. இவற்றிற்கெல்லாம் நம்மை நாமே ஆள்வதற்கென நாம் அமைத்துக்கொண்ட அரசாங்கங்களெல்லாவற்றிலும் முதலாளித்துவ சக்திகளும், சுயநலப் போக்குடையவர்களும் நுழைவதை எம்மால் தவிர்க்க முடியாத கையாலாகாத்தனத்தை ஒப்புக்கொண்டு எமது வாழ்க்கை முறையையும் எமது சமூக அமைப்பையும் உருவாக்கி வந்துள்ளோம்.

இந்த நிலைமையை நாம் எமது கைகளால் மாற்றியமைப்பதன் மூலமே ஈழமாதா உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்க வழி செய்தவர்களாவோம். இத்தகைய ஒரு பொறுப்பை ஈழமக்கள் ஒரு பொறுப்புவாய்ந்த தலைவனிடம் சென்ற பொதுத்தேர்தலில் முழு நம்பிக்கை வைத்து ஒப்படைத்தனர். அத்தகைய நம்பிக்கைக்குப் பாத்திரராகி ஒப்புயர்வற்ற தலைவராக இந்நாட்டின் தலைமகனாக இன்று பிரதிக்ஞை எடுக்கும் ஜே ஆர், இலங்கை மக்களைப் பூரண சுதந்திரமுடையவர்களாக ஆக்கும் ஒரு நீதியும் சுதந்திரமுமுடைய தார்மீக சமுதாயத்தின் சிற்பியாகத் தலைநிமிர்கிறார். இவர் இத்தகைய பாரிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கான பலத்தை அதிகரித்ததன் மூலமோ ஆயுதத்தின் மூலமோ சாதிக்காது தமக்கு மக்கள் அளித்த உத்வேக வெற்றியையே முழுப் பலமாகக் கொண்டுள்ளார்.

உலகம் முழுவதும் பரந்துள்ள முதலாளித்துவ ஊடுருவற் சக்திகளை ஒழிப்பதற்கு உதாரணமுகமான வழிகாட்டியர்ன வழிகாட்டியான ஓர் அரசை இலங்கையில் அமைப்பதற்கு அன்னார் எடுக்கும் முயற்சிகளுக்கு மனதாலும், உடலாலும் முழு ஒத்துழைப்பையும் அளிப்போமென ஈழமாதாவின் புத்திரர் ஒவ்வொருவரும் இன்று பிரதிக்ஞை எடுக்கிறார்கள். இவர்களது கரங்களே தார்மீக சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் சிற்பி ஜே. ஆரின் சிற்றுன்கள். அன்னார் பல்லாண்டு வாழ்ந்து இலங்கையின் பொற்காலத்தைக் காணவேண்டுமென இறைவனை இறைஞ்சுகிறோம்.



வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக்
குடியுயரும்
குடியுயரக் கோன்
உயர்வான்

—ஔவையார்

May the (Mahaweli, waters rise as the bunds rise to contain the waters

May the harvests abound as the waters rise

May the people rejoice as the harvests multiply

May the king's glory rise as the people's happiness rises.

## வாழ்க்கை வரலாறு

கௌரவ ஜே. ஆர். ஜெயவர்த்தன 1906-ம் ஆண்டு செப்டம்பர் 17-ம் திகதி பிறந்தார். இவர் நீதியரசர் திரு. ஈ. டபிள்யூ. ஜெயவர்த்தனாவின் முதல்வர்.

கொழும்பு ரோயல் கல்லூரியில் பயின்று பின்னர் கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியிலும் கல்வி கற்றார். சட்டம் பயின்று சட்டத்தரணியாக வெளியேறினார்.

1940-ம் ஆண்டு கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் வெற்றிபெற்று நகரசபை உறுப்பினரானார். 1943-ல் களனித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று சட்டசபைக்குப் போனார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல அமைச்சரவைகளிலும் இவர் இடம்பெற்றிருந்தார். நிதி அமைச்சராகவும், விவசாய அமைச்சராகவும், ராஜாங்க அமைச்சராகவும் இவர் பணியாற்றியுள்ளார். 1970-ம் ஆண்டு முதல் 77 வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். 1977-ம் ஆண்டு இலங்கையின் மாண்புமிகு பிரதமரானார். இன்று மேன்மை மிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கிறார்.

## உரிமைபெற்று அச்சம் நீங்கி வாழ்வோம்

— ஏ. தில்லைநாதன் —

தர்ம நாட்டின் முதல்வரது மக்கள் ஜனாதிபதியாக பதவி ஏற்கும் கௌரவ ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் எமது நாடு ஜாதி, மத, பேதமற்ற ஒரு ஜனநாயக சோஷலிச சமுதாயத்தை உருவாக்கி இந்நாட்டின் பூர்வீக குடிகளான தமிழர் சமுதாயம் சிங்களச்சகோதரர்களுடனும், முஸ்லிம் பெருமக்களுடனும் இணைந்து சகல துறைகளிலும் சரிநிகர் சமானத்துடன் எமது உரிமைகள் பெற்று, அச்சம் நீங்கி, அறம் தழைக்க இந்நாடு எமது நாடு என்ற சுய உணர்வுடன் வாழ்வோமாக. பேராற்றலும், சிறந்த ராஜதந்திரமும் இன ஐக்கியத்தின் பாலமாக விளங்கும் முதலாவது ஜனாதிபதி அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.




A. THILLAINATHAN
U. N. P. Co-Organiser
CHAVAKACHCHERI

### சாவகச்சேரித் தொகுதி

ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகள் சார்பில்

நல்லாசி கூறி வாழ்த்துகிறோம்.



மேன்மை தங்கிய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன், ஊர்காவற்றுறை ஐ. தே. க. கட்சி வேட்பாளரும் பிரதம அமைப்பாளருமான திரு. ம. அமிர்தலிங்கம் காணப்படுகின்றார்.

### "Towards a free and just society"

*His Excellency*
*J. R. Jeyawardene*

I would like to say at the outset that the sovereignty of the people enshrined in the Republican constitution will be unaffected.

We in our party are firm believers in the sovereignty of the people; in the multi-party system. We will not permit those two principles to be changed.

We are trying our best to run a new society. We cannot expect that to happen in a day or two or in a month or two. There are defects among our Members of Parliament. They have pressures from the people to change this man or to change that man, to transfer this officer or to transfer that officer. They also must survive as Members of Parliament. Members are also trying to survive.

I want the full co-operation to create a free and just society in this country despite all the defects we have. I want to do it as best as we can and I want the co-operation and the help of all political parties inside and outside to create this society as best as we can.



இலங்கை ஜனாதிபதி
கௌரவ ஜே. ஆர். ஜெயவர்த்தன
அவர்களை
**வாழ்த்துகிறோம்**
சரவணபவன் ஆபரண மாளிகை
(உரிமை: கே. கே. யோகநாதன்)
தங்க வைர நகை வியாபாரம்
கண்டி வீதி — சாவகச்சேரி



மக்கள் ஜனாதிபதிக்கு
உளங்கனிந்த
**நல் வாழ்த்துக்கள்**
'பாமினி கிறஸர்'
இ. பாலசுந்தரம்
கோண்டாவில்.



முதன் முறையாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட
ஜனாதிபதி கௌரவ
ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களை
**வாழ்த்துகிறோம்**
மணியம் ஸ்ரோர்ஸ்
கண்டிறோட் — சாவகச்சேரி

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
**United National Party**

Published By
Kayts & Chavakachcheri

# மாநிலசுயாட்சி இன்றேல் சர்வாதிகாரமே தலைதூக்கும்!

## ஷேக் அப்துல்லா கருத்து

காஷ்மீர், பெப்.3

**'முதலமைச்சர்கள் தும்முவதற்குக் கூட மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும். கடந்த காலங்களில் நடாத்தப்பட்டதுபோல் மாநில அரசுகளை வெறும் மாநகரசபைகளாகக் கணிப்பதைச் சகித்துக்கொண்டிருக்கமுடியாது. மாநிலங்களுக்கு சுயாட்சியில்லையேல் அந்நிலைமை சர்வாதிகாரத்துக்கு வழிவகுத்துவிடும்.**

இவ்வாறு ஜம்மு-காஷ்மீர் முதல்வர் ஜனாப் ஷேக் அப்துல்லா பத்திரிகையாளர் மத்தியில் மாநில சுயாட்சி பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

மாநிலங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும். இதனால் மத்திய அரசு பலவீனப்படும் என்பதில் அர்த்தமில்லை. முன்னைய அரசுகள் மாநிலங்களுக்கு அதிகாரங்களை வழங்காதது போல் ஜனதா அரசும் வழங்காமல் இருக்குமென நான் எண்ணவில்லை. மேற்கு வங்காள முதல்வர் திரு.ஜோதிபாசு கூட மத்திய மாநில உறவுகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார்.

இந்தியப் பிரதமர் மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்கினால் அரசு பலவீனம் அடையுமென கூறியிருப்பது தவது. தேர்தல் காலத்தில் கூறிய கருத்துக்கு இது முற்றிலும் முரணானது. [கெ-இ]

'சர்வாதிகாரத்தை எதிர்க்க

## ஜனதா-தி.மு.க.வுடன் இணைய மார்க்.கம்யூனிஸ்ட்கட்சிதயார்'

சென்னை, பெப். 3

ஜனதா கட்சி, தி மு க ஆகியவற்றுடன் கருத்து வேறுபாடு இருந்தாலும்சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போராட இக்கட்சிகளுடன் சேர்ந்து உழைப்பதற்கு இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி என்றும் தயாராக இருக்கிறது.

இவ்வாறு மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாட்டுத் தலைவர் திரு.பி.இராமமூர்த்தி கூறினார்.

சென்னையில் நடைபெற்ற கட்சியின் நான்குநாள் மகாநாட்டில் அவர் மேலும் பேசுகையில், மீண்டும் நாட்டில் தலைதூக்கும் சர்வாதிகாரசக்திகளை அடக்கி ஒடுக்க நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றும் கூறினார்.

### பங்குபற்றவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் யாழ். மாநகரசபை ஊழியர் வேலைநிறுத்தத்தில் ஜனநாயக உள்ளூராட்சி சிறு ஊழியர் சங்க உறுப்பினர் பங்குபற்றவில்லையென சங்கச் செயலாளர் திரு. வி. ஞானப்பிரகாசம் அறிவித்துள்ளார். [ஈ]

ஜனதா அரசு

## ஜனநாயகக் கொள்கைகளை குழிதோண்டிப் புதைக்கிறது

### இந்திரா குற்றச்சாட்டு

புதுடில்லி, பெப்.3

''ஜனதா கட்சி அரசு இந்தியாவின் கடந்த 30ஆண்டு கால சோஷலிஸ, ஜனநாயக கொள்கைகளை குழிதோண்டி புதைத்து விடுகிறது''

இவ்வாறு முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி திருப்பதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

ஹரிஜனங்களுக்கு அதிக நிலங்கள் வழங்கவேண்டும் என்ற முன்னைய அரசின் கொள்கைகளைக்கூட ஜனதா அரசு கைவிட்டுவிட்டது என்றும் திருமதி காந்தி கூறினார். (இ)

## நிர்வாணக் கோலத்தில் நடமாடிய 'ஸ்டண்ட்மாஸ்டர்'

சென்னை, பெப்.3

தென்னிந்திய திரைப்பட சண்டைப்பயிற்சி மாஸ்டர் ஒருவர் குடிபோதையில் நிர்வாணமாக நீண்டநேரம் தெருவீதியில் கத்தியுன் நடமாடி கலவரத்தை ஏற்படுத்தினாராம்.

சென்னை கருணாநிதிநகர் சிவலிங்கபுரத்தில் இச்சம்பவம்நடைபெற்றது.

சந்தேகநபர் குடிபோதையில் இருக்கக்காணப்பட்டதாயும் வீதிகளில் திறந்திருந்த கடைகளை அடித்து சேதம் விளைவித்தாதகவும் பொலிசார் தெரிவித்தனர்.

பொலிசார் இவரைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். இவர் நடிகர் சங்கத்தின் முக்கிய உறுப்பினராவார். [கெ-இ]

## இந்திரா கட்சிக்கு அங்கீகாரம்

புதுடில்லி, பெப்.3

காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் குழுவை இந்திய தேர்தல் ஆணையாளர் ஒரு தேசியக் கட்சிஎன அங்கீகரித்துள்ளார்.

இதை அடுத்தே இந்திரா காங்கிரஸுக்கு தேர்தல் சின்னமாகக் 'கை' வழங்கப்பட்டுள்ளது.

காங்கிரஸின் பசுவும் கன்றும் சின்னத்துக்கு உரிமை கோரி ரெட்டி — இந்திரா ஆகிய இரண்டு குழுக்களுமே தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பித்திருந்த போது ரெட்டி குழுவுக்கே இச்சின்னம் உரியது என ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தொடர்ந்தும் திருமதி காந்தி குழுவினர் இச்சின்னம் தமக்கே உரியது என்று கோரி சுப்ரீம் கோட்டில் மனுச் செய்திருந்தும் இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது தெரிந்ததே. [இ]

### பாரம் தூக்குவதில் உலக சாதனை

பக்கு,பெப்.3


இங்கு நடைபெற்ற பாரம் தூக்குதல் போட்டி யொன்றில் 222 கிலோகிராம் எடையைத்தூக்கி 21வயதான அதாம் சவூதிலயேவ் உலக சாதனையொன்றினை நிலைநாட்டியுள்ளார்.

இதன் மூலம் சவூதிலயேவ் 221.5 கிலோகிராம் எடையைத் தூக்கி கஸாக்ஸ்தானைச் சார்ந்த பனுகோய் நிலைநாட்டிய சாதனையை முறியடித்துள்ளார்.


**இப்போது மென்மையான, செம்மையான, இதமான அநேகம் க்ஷவரங்கள் எடுப்பதற்கு**

**கிளாஸிக் பிளேட்**

(பொலிமர் பூசிய ஸ்டெய்ன்லஸ் உருக்கு)




விநியோகத்தர்கள்: உறவுஸ் அண்ட் புரொபர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்

RAVI

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி-சரோஜாதேவி- வாணிஸ்ரீ- நாகேஷ்
K. பாலச்சந்தரின்
## "தாமரை நெஞ்சம்"
(புதிய பிரதி)

சிறுவர்களுக்கான ஆங்கிலப்படக்காட்சி
சனி, ஞாயிறு காலை 8-30 மட்டும்
## "TREASURE ISLAND"

---

நாலாவது வெற்றிவாரம்
**ராணி** வி. பி. கணேஷன் — சுபாக்ஷினி
ராம்தாஸ் — ஜெனீட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
## நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

---

50-வது நாளைநோக்கி வெற்றிநடைபோட்டு ஓடுகிறுள்
**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
## இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

---

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜய.
## மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

---

**RIO** Grand Release
(Jaffna) Daily 4 Shows

நரகத்தின் மூலை எனக் கணிக்கப்படும் வனத்திலே அகப்பட்ட இரண்டு கூலிப்பட்டாள வீரர் உலகம் கண்டிராத இரத்தக் களரி நிறைந்த யுத்தத்தைக் காண-

## HIGH VELOCITY
More Suitable For Adults

---

**Regal** (Jaffna)
Daily 4-45, 7-00 & 9-30 p. m.
Hayley Mills Hywel Bennett
in
## TWISTED NERVE
(color)

---

**வெலிங்டன்** தினசரி 4 காட்சிகள்
## கணவன்

---

கடைசிவாரம்
**லிடோ** எம். ஜி. ஆர். - லதா நடித்த
(யாழ்.நகர்) போன்; 7693
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
## நீதிக்கு தலைவணங்கு

---

**மனோஹரா** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - விஜயா நடித்த
## இரு மலர்கள்

---

## பொங்கு தமிழ் இன்பத்திருநாட்டில் 100 நாட்களுக்கு
## மேல் ஓடிய வெற்றிச்சித்திரம் வண்ணக் கலரில்
## சங்கமம்!

தினசரி 4 காட்சிகள்

## ராஜா
[யாழ்.நகர்]

மக்கள் கலைஞர்
★ ஜெய்சங்கர் ★
புன்னகை அழகி
★ கே.ஆர். விஜயா ★
★ மனோகர் ★
★ விஜயகுமார் ★
★ சோ ★




அசோகா பிரதர்ஸ்
# "மேயர் மீனாட்சி"
ஈஸ்ட்மென் கலர்

பணம் படைத்த சில பெரிய மனிதர்களின் போர்வையை கிழித்தெறிந்து நாட்டில் நீதியை நிலைநாட்டி அநீதியை ஒழித்து நேர்வழி நின்று தனிவழி வகுத்த ஒரு இளம் பெண்ணின் உள்ளக் குமுறல்.

---

## ஆணையாளரை யோகேஸ் பார்வையிட்டார்
[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசை விசேட ஆணையாளர் திரு கே. சிவஞானத்திற்கு நேற்றுக் 'எக்ஸ்ரே' படம் பிடிக்கப்பட்டது. அதிகம் பேசக்கூடாதென டாக்டர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

பெரிய ஆஸ்பத்திரி 14-ம் வார்ட்டில் கட்டிலில் படுத்தபடியிருக்கும் ஆணையாளரை யாழ்ப்பாணத் தொகுதி எம். பீ. திரு வெ. யோகேஸ்வரன், யாழ் வரியிறுப்பாளர் சங்கச் செயலாளர் திரு. கே. மகாலிங்கம், முன்னுள் மேயர் திரு. சி. நாகராசா, முன்னுள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ. நடராசா, சேவியர் எம். ஜி. பஷீர் ஆகியோர் பார்வையிட்டனர்.

வேலைநிறுத்தத்தில் பங்குபற்றுத மலசுத்திகரிப்புதொழிலாளர்களும் ஆணையாளரை வந்து பார்வையிட்டனர்.

[க-ஐ]

---

மாத்தளை

## ஸ்ரீமுத்துமாரியம்மன் வருடாந்தமகோற்சவம்
[மாத்தளை]

மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான மாசி மகத்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இன்று முதல் இம்மாதம் 22-ம் திகதி வரை வழமை போல் பகல் இரவு திருவிழாக்கள் இடம்பெறும்.

21-ம் திகதி காலை தீக்குளிப்பும் பகல் ஸ்ரீசிவனடியார்கள் திருவிழாவும் 12 மணிக்கு மேல் அன்னதானமும் அன்றிரவு திருச்சூரகத் திருவேட்டைத்திருவிழாவும் 22-ம் திகதி இரவு பஞ்சஇரதோற்சவமும் நடைபெறும்.

தீர்த்தோற்சவம் 24-ம் திகதியும், 25-ம் திகதி இரவு பூங்காவன உற்சவமும் இடம் பெறும்.

மகோற்சவ நாட்களில் சங்கீதகதாப் பிரசங்கங்கள் நடைபெறவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

---

## குறை நீங்கியது
(மாவிட்டபுரம்)

நிரந்தர பொதுமுகாமையாளர், கணக்காளர் ஆகியோர் இல்லாது கடந்த 5 ஆண்டுகளாக இயங்கிவந்த கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர், சங்க நெறியாளர் குழுவினர் ஆகியோர் எடுத்த நடவடிக்கையினுல் பொதுமுகாமையாளரும், கணக்காளரும் கூட்டுறவு சேவை ஆணைக்குழுவின் அங்கிகாரத்துடன் நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30,
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
## தாயைக் காத்த தனயன்

---

**நாகம்ஸ்**
[சுன்னுகம்]
தினசரி: 6-45, 10-00
K பாலசந்தரின்
## அபூர்வராகங்கள்

---

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெய்சங்கர் - சுஜாதா
## நீ ஒரு மகாராணி

# "மக்கள் பணி ஒன்றே என் இலட்சியம்"

— எஸ், கே. என். சிவ்ராஜா

[யாழ்ப்பாணம்]
தியாகத்தை விலைபேசும் அளவுக்கு தரம்குறைந்துவிட வில்லை நாம்" என்று காங்கேசன்துறைத் தொகுதி ஐ. தே. க. பிரதமஅமைப்பாளர் திரு. எஸ். கே., என். சிவராஜா அளவெட்டியில் நடைபெற்ற மத்தியகுழுக் கூட்டத்தில் தலைமைவகித்து உரையாற்றுகையில் கூறினர்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது: காந்திய வழிபற்றிச் செயலளவில் பணிபுரிய முற்படுபவர்கள் நாம். நாம் பேச்சளவில் காந்தியத்தை இழிவுபடுத்த நாம் தயாரில்லை. மக்கள் பணி ஒன்றே இலட்சியம்;

இந் நாட்டில் அராஜகத்தையும் எதேச்சாதிகாரத்தையும் ஒழித்து சமூகத்தின் இணையில்லாத் தலைவர் திரு. ஜெயவர்த்தன தலைமையில் பணி புரிவதே எம் குறிக்கோள். மாசற்றவழியில் மக்கள்பணி செய்பவர்கள் நாம். தலைவர் திரு. ஜே. ஆரின் புனிதமான அரசியல்பாதையை மக்கள் புரிந்துகொள்ளத் தொடங்கி விட்டனர். எனவே பொய்ப் பிரசாரங்கள் விதண்டாவாதங்களால் விளையப்போவது எதுவுமில்லை" என்றார்.

திரு. கே. கணேசலிங்கம் உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

# இலங்கைக்கு இயற்கைதந்த பெரும் கொடை ஜே. ஆர்.

## பிரேமா புகழ்மாலை

[கொழும்பு]
நமது நாட்டுக்கு இயற்கை தந்த பெரும்கொடை திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன.

இவ்வாறு சபைமுதல்வர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று தேசிய அரசுப்பேரவையில் பேசும்போது கூறினர்;

இன்று ஜனதிபதியாகப் பதவியேற்கும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைப் பாராட்டும்முகமாக நேற்று தேசிய அரசுப்பேரவையில் இடம் பெற்ற விசேடவைபவத்தில் பேசுகையிலேயே திரு. பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஜே. ஆரைப் பாராட்டும் பிரேரணையை முன்மொழிந்து பேசுகையில் திரு. பிரேமதாசா மேலும் கூறியதாவது:

### மக்களின் கருத்துக்கு மதிப்பளிப்பவர்

மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து ஆக்கபூர்வமான பல நடவடிக்கைகளை மேற்கொண்ட பெருந்தலைவரான திரு. ஜயவர்த்தன வெற்றியிலும் தோல்வியிலும் நிலை தளம்பாமல் நிலையான கொள்கைகளைக் கடைப்பிடித்தார்.

பதவி மோகம் இவருக்கு என்றும் இருந்ததில்லை அதிகாரத்தை என்றும் இவர் துஷ்பிரயோகம் செய்ததில்லை.

நேர்மையும் சத்தியமும் ஒருங்கே அமையப்பெற்ற திரு. ஜயவர்த்தன ஓர் உன்னதத் தலைவர்.

இயற்கையின் பேருகக் காலத்திற்குக் காலம் எமக்குக் கிடைத்த பெருந் தலைவர்களில் திரு. ஜயவர்த்தனவும் ஒருவர்.

### சர்வதேச அரங்குகளில் பெருமை

சர்வதேச அரங்குகளில் இலங்கைக்குப் பெருமை தேடித் தந்த சான் பிரான்சிஸ்கோ மகாநாட்டில் ஆற்றிய உரை வரலாற்று முக்கியம் வாய்ந்ததாகும்.

### சேர் பொன் இராமநாதன் வரிசையில்....

தேசிய வீரர்களான சேர் பொன்னம்பலம் இராமநாதன், அநாகரிக தர்மபாலா, வண இங்க ஹரிச்சந்திர, எப். ஆர். சேனநாயக்க ஆகியோரின் வரிசையில் தேசிய விடுதலைக்கு உழைத்தார்.

30 ஆண்டு காலமாக இந்த நாட்டு மக்களின் மீட்சிக்காக அயராது உழைத்து வரும் உன்னத தலைவர். [இ]

# பாராளுமன்ற ஜனநாயகத்தின் பாதுகாவலர் ஜே. ஆர்.

## தொண்டமான் பாராட்டு

[கொழும்பு]
இந்த நாட்டின் சகல இன மக்களினதும் நம்பிக்கையைப் பெற்ற சிறந்த அரசியல்வாதியான திரு. ஜே. ஆர். பாராளுமன்ற ஜனநாயகத்தின் பாதுகாவலராவார்.

இவ்வாறு நுவரேலியா, மஸ்கேலியா தொகுதி மூன்றாவது எம். பி, திரு. தொண்டமான் பேரவையில் கூறினர்.

திரு. தொண்டமான் மேலும் பேசியதாவது:

தமக்குச் சரி எனத் தோன்றியதைத் தயங்காமல் செய்து முடிக்கும் ஒரு சில செயல் வீரர்களில் ஜே. ஆரும் ஒருவர். கடந்த 6 மாதங்களில் இவர் ஆற்றிய ஓரளவு சேவை இவரது செயல் திறனை எடுத்துக் காட்டுகிறது.

திரு. ஜே ஆரின் ஆட்சியில் இலங்கைக்கு ஒளிமயமான எதிர்காலம் அமையும் என்பதில் ஐயமில்லை. [இ]

......

## மக்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
யாக படையினர் மரியாதை செலுத்துவர். 8-45க்கு பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடமிருந்தும் ஜனதிபதி பிரியாவிடை பெற்றுச் செல்வார். 8 55க்கு பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், பிரதம நீதியரசரும் விசேட மேடைக்கு வருவார்கள்: 8 58க்கு அழைக்கப்பட்டோர் எழுந்து நிற்க, திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன மக்கள் தேர்ந்தெடுத்த ஜனதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்வார்.

பகல் 12-55க்கு புதிய ஜனதிபதியும், பாரியாரும் ஜனதிபதி மாளிகைக்கு வருதல். அப்போது இலங்கை கடற்படைனரால் 25 மரியாதைக்குண்டுகள் தீர்க்கப்படும். பிற்பல் 1 மணிக்கு ஜனதிபதியும் பாரியாரும் ஜனபதி மாளிகையில் நுழைதல்.

## துணிவும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அதற்குப் புத்துயிர் அளித்த பெருந் தலைவர்" என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் நேற்று தேசிய அரசுப்பேரவையில் புகழ்மாலை சூட்டினர்.

திரு. ஜே. ஆருக்கு பாராட்டுத் தெரிவிக்கும் பிரேரணையை வழிமொழிந்து பேசுகையிலேயே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

உருக்குலைந்து கிடந்த ஐக்கியதேசியக்கட்சியை ஆட்சி பீடமேற்றிய மிடுக்கான தலைவரான திரு. ஜே. ஆர். கட்சியின் கொள்கையில் அசையாத நம்பிக்கைகொண்டிருந்தார்

கடந்த தேர்தலில் ஐ. தே க வுக்குக் கிடைத்த அமோக வெற்றியின் மூலகர்த்தா திரு ஜெயவர்த்தனஆவார். சொல்வனவற்றை செயலிலும்செய்வனவற்றை சொல்லிலும் காட்டும் ஒருசிலருள் திரு. ஜே. ஆரும் ஒருவர்.

"ஒழுக்கநெறியிலும் சத்தியத்தின் வழியிலும் அசையாத நம்பிக்கைகொண்டிருந்த எமது தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் அவர்களினல் வழிநடத்தப்பட்ட ஒருவன் என்ற முறையில் திரு ஜே ஆர். ஜயவர்த்தனவுக்கு தனிப்பட்ட அரசியல் மதிப்பை அளிக்கின்றேன்.

"அரசியல் தலைவர்களிடையே ஒரு உன்னத இடத்தைப் பெற்ற திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன ஒரு சரித்திர புருஷராகத் திகழ வாழ்த்துகிறேன் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது ஜனதிபதியின் புதிய பணிகள் வெற்றி பெற வாழ்த்துகின்றேன்" [ம]



ஜனதிபதியாக மாண்புமிகு ஜே. ஆர். பதவியேற்பதையிட்டு நேற்று யாழ். மாவட்ட ஐ. தே. க. விழா குழுவினர், வண்ணை வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் ஒழுங்குசெய்த விசேட சங்காபிஷேகத்தில் கலந்து கொண்ட யாழ். அரசாங்க அதிபர் திரு. விஜயபாலா, பொலிஸ் அதிபர் திரு. ரண்முத்துகல, உதவி பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராசா, உதவி அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம், ஊர்காவற்றுறை ஐ. தே. க. அமைப்பாளர் திரு. அமிர்தலிங்கமும் இப்படத்தில் காணப்படுகின்றனர்.

# "சுயநிர்ணய உரிமை" பற்றிய பேச்சுவார்த்தை

[யாழ்ப்பாணம்]
இந்தியாவில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கலந்துவிட்டு, கொழும்பு திரும்பும் வழியில் மக்கள் ஜனநாயக முன்னணிப் பொதுச்செயலாளர் திரு. நிஹால் பெரேரா நேற்று யாழ்ப்பாணம் வந்தார். இவர் சில தினங்கள் யாழ்ப்பாணம் தங்கியிருந்து இளைஞர் பேரவைத்தலைவர்களையும் கூட்டணிப் பிரமுகர்களையும் சந்தித்து, தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை பற்றி கலந்துரையாடினர்.

இவரது நிகழ்ச்சிகளை, செந்தமிழர் இயக்கத்தலைவர் திரு. வி. பொன்னம்பலம் ஒழுங்கு செய்திருந்தார். நேற்று மாலை, கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை இல்லத்தில் உரையாடலும் தேநீர் விருந்தும் நடைபெற்றது.

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]
தமிழர் விடுதலைக்கூட்டணியின் வாராந்த கருத்தரங்கு இன்று மாலை தமிழர்விடுதலைக் கூட்டணி காரியாலயத்தில் "அமரர் நாகநாதன் நினைவுதினமாக அனுஷ்டிக்கப்படும், கருத்தரங்கில் கரிகாலன், ஈழவேந்தன் கோவை மகேசன் உட்பட பலர் உரையாற்றுவர். (கெ)

## இடமாற்றம்

[மாவிட்டபுரம்]
கொழும்பு தபால், தந்தி, தொலைத் தொடர்பு அலுவலக மாவட்ட அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. ஏ. சந்தானகிருஷ்ணன், கடந்த மாதம் முதல் யாழ். மாவட்ட தபால் தந்தி தொலைத் தொடர்பு அலுவலராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


## வைத்தீஸ்வர வித்தியாலயம்

யாழ்ப்பாணம்

க. பொ. த. உயர்தர விஞ்ஞான வகுப்புகளுக்கு தூயகணிதம், பிரயோககணிதம், இரசாயனம், பௌதிகம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கக்கூடிய தகுதிவாய்ந்த இரண்டு ஆசிரியர்கள் உடனடியாகத் தேவை. விரும்புவோர் என்னுடன் தொடர்பு கொள்ளவும்..

A. நடராஜா
அதிபர்.

2-2-1978. 8403


## வதந்திகள் பரப்பினராம்

### எண்மர் கைது

(கொழும்பு)
வதந்திகள் பரப்பியதாக, சந்தேகத்தின் பேரில் இருவர் மதவாச்சி பொலிஸாரினல் கைதுசெய்யப்பட்டனர்.

ஜனதிபதி பதவியேற்பு வைபவம் தொடர்பாகவே இவர்கள் வதந்தி பரப்பினர்கள் எனக் கூறப்படுகிறது.

கூப்பன் வாபஸ் பெறுவது தொடர்பாக, பிரதமரை அவமதித்தாக சந்தேகத்தின்பேரில் பன்னலயில் 6 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா கந்தையா

இவர் காலஞ்சென்ற வே. கந்தையாவின் அன்பு மனைவியும், திருமதி சோமசுந்தரம் கமலாம்பிகையின் அருமைத் தாயாரும், சிங்காரவடிவு [விற்பனை முகவர், இலங்கை பெற்றோலியம் கூட்டுஸ்தாபனம்], திருமதி மகாதேவ தவலோகநாயகி, திருமதி பாலேந்திரா விமலாதேவி, செல்விகள் விஜயகுமாரி, இந்துமதி ஆகியோரின் அருமைப் பாட்டியுமாவார். அன்னரின் பூதவுடல் 4-2-78 சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரிகைகளுக்காக இல. 1, ஆடியபாத வீதியில் இருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: சோ. சிங்காரவடிவு, இல. 1, ஆடியபாத வீதி நல்லூர்ச் சந்தை. 8419

இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்லோவில் மேலே வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.